# வரலாற்றின் இயேசு விசுவாசத்தின் இஎசுதானா? – நிகழ்ச்சி 4

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை குறித்ததான செய்திதான் பெரும்பாலும் பரவலாக பேசப்பட்டு வருகிற செய்தியாக இருக்கிறது பல தேசிய பத்திரிக்கைகளின் கவனத்தை ஈர்த்துவருகிறது, குறிப்பாக டைம், நியூஸ்வீக்,மற்றும் US நியூஸ் மற்றும் வேல்ட் ரிபோர்ட். மேலும், இயேசு செமினாரின் அறிக்கைகளுக்கு ஊடகங்கள் அளவிற்கு அதிகமான இடமளித்து பெரிது படுத்துகிறார்கள் என நினைக்கிறன், தனிச்சையாக தேர்வு செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டின் வல்லுனர்கள் சிலரை கொண்டிருக்கும் சிறிய கூட்டமாக இருக்கிறது.

இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை பற்றிய விவாதங்களில் எழும்பும் கேள்விகளை குறித்து பார்க்க இருக்கிறோம் பொதுவாகவும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலும் இயேசுவை குறித்த பலதரப்பட்ட வரலாற்று உண்மைகள் சரித்திரத்தில் சொல்லபடும் இயேசுதான் கிறிஸ்த விசுவாசத்தின் இயேசு என்பதை நிருபிக்கும்விதமாக இருந்து வருகிறது.

எனது விருந்தினர் உலக தரம்வாய்ந்த சித்தாந்த வாதியான Dr. ஹேபர்மாஸ், புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், வரலாற்று இயேசு. அவர் தமது Ph. D. யை மிக்கிகன் மாநில பல்கலைகழகத்தில் பெற்றார், இரண்டாவது டாக்டர் பட்டத்தை ஆக்ஸ்போர்டிலுள்ள இம்மானுவேல் கல்லூரியில் பெற்றார், இங்கிலார்ந்து. Dr. ஹேபர்மாஸ் லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தம் மற்றும் இறையியல் பாடபிரிவின் சேர்மேனாக இருக்கிறார் இவர் இயேசுவின் வாழ்கையை குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார் அவை சில பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்த புதிய ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இணைந்திட அழைக்கிறோம் ஏன் இயேசு ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களில் அதிக வரலாற்று ஆதாரங்களை கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வணக்கம். இன்றைக்கு மூன்று காரியங்களை நாம் ஆராய்ந்து பார்க்க இருக்கிறோம். முதலாவது, இயேசுவின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்த பிறகு எப்படி நவீன கால வல்லுனர்கள் தங்கள் கருத்தை மாற்றிகொண்டார்கள்? இயேசு தேவன் என்று சொன்னதற்கும் மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்பதை நம்புவதற்கு இன்னும் வரலாற்று ஆதாரங்கள் இருக்கிறதா? இரண்டாவது, இயேசுவை குறித்து இன்னமும்

இருந்துவருகிற சில வரலாற்று ஆதாரங்களை குறித்த கேள்விகளை பார்க்க இருக்கிறோம், குறிப்பாக, புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள அற்ப்புதங்கள் எப்படிபட்டது? இது உண்மையில் நடந்த சம்பவம் என்று இருபதாம் நூற்றாண்டு மனிதன் சொல்ல முடியுமா? மூன்றாவதாக, இன்றைக்கு விமர்சக வல்லுனர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிற 12 வரலாற்று ஆதாரங்களையும் இன்றைக்கு அது உறுதியான ஆதாரமாக இயேசு வாழ்ந்தார், தன்னை தேவன் என்று சொன்னார், சிலுவையில் மரித்து உயிர்த்தார் என்று விசுவாசிக்க உதவுகிறது. முதலாவதாக, இயேசுவின் வாழ்க்கையை ஆராய்ந்த நவீன கால வால்லுனர்கள் தங்கள் கருத்தை எப்படி மாற்றிகொண்டார்கள்? Dr. கேரி ஹேபர்மாஸ் விளக்கமளிக்கிறார்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** பொதுவாக இன்றைய புதிய ஏற்பாட்டு மேதைகள் அனைவரும் வரலாற்று இயேசுவை தளைத்தோங்க செய்ய மூன்று காலங்களை பயன்படுத்துவார்கள். பாரம்பரிய காலம். இப்ப, சில முன்மாதிரிகள் இருக்கிறது. அதற்கு நீங்க ஆங்கில வழிமுறையை பார்க்கணும்; ஜெர்மானிய பகுத்தறிவாளர் ரீமாராஸ் போன்றவர்களை பார்க்கணும். ஆனா இங்க மாதிரியாக இருப்பது, என்னன்னு கேட்டா "இயேசுவின் வாழ்க்கை" பரந்த கொள்கைகள் இருந்த நாட்களில், "பழைய பாரம்பரியம் என்பார்கள், "ஜெர்மானிய பார்மபரியம் ய நப்பார்கள்." இங்கு, பெரும்பாலும் ஜெர்மானிய கருத்தியலின் சித்தாந்த யோசனைகள் எல்லாம் இறையியலில் இருந்து உருவானது. கடந்த சில நூற்றாண்டுகளில் இயேசுவின் வாழ்க்கை பற்றி எல்லாருக்கும் நன்றாக தெரியும். உண்மையில், அனேக புத்தகங்களில் இயேசுவின் வாழ்க்கை என்ற பெயரில் இருக்கிறது.

மேலும் பரந்த கொள்கையை உடையவைகள், அதிகமாக – மேலோட்டமான பொதுவான கண்ணோட்டத்து அளிக்கிறது – சுவிசேஷங்களை வரலாறாக பயன்படுத்தி கொள்ளலாம், அதுல இரண்டை மட்டும் நிராகரித்திடலாம். ஒன்று டாக்மேடிக் இறையியல் – இயேசுவை தேவ குமாரன் என்றோ மரித்தோரிலிருந்து உயிர்த்தார் என்றோ சொல்ல வேண்டாம். எங்களுக்கு அற்புத்தங்கள் பிடிக்காது. எங்களுக்கு சமயகோட்பாடுள்ள இறையியல் பிடிக்காது இதை உறுதி செயும்விதமான விவாதங்களும் பிடிக்காது. அவங்க இயற்கைக்கு அப்பாற்பட்டதை குறித்து பேச விரும்பமாட்டாங்க. அதனால சுவிசேஷத்தை மட்டும் எடுத்துகொள்கிறார்கள், அதை அவர்கள் சொல்லும்போது, "எனக்கு வரலாற்றை மட்டும் சொல்லுங்க. இறையியலை எடுத்திடுங்க சமயகொட்பாடுகள் வேண்டாம். அற்புதங்களை எடுக்க சொல்றாங்க. மீதியிருப்பது? வரலாற்று இயேசுதான்.

இப்ப, ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு காலம் இருந்தது அப்ப பிரபலமாயிருந்தது "வரலாற்று இயேசுவை குறித்த கேள்விகள்" ஆல்பர்ட் ஸ்கீவீட்சர் அவர்களின் பிரபலமான புத்தகம் நூற்றாண்டுகள் கடந்து அதற்க்கு முன் வந்த பரவளான யாவற்றோடும் இணைந்து கொண்டது, உதாரணமா, டேவிட் ஸ்ட்ராஸ். இப்ப, டேவிட் ஸ்ட்ராஸ் ருடல்ப் புல்ட்மேனுக்கு முன்னோடியாக இருந்தார்.

தி பாரஸ்ட் குவெஸ்ட்க்கு பிறகு, இருந்த காலத்தை மக்கள் "கேள்வியில்லா காலம் என்றனர்." ரூடல்ப் புல்ட்மேன், கார்ல் பார்த். போதுமான அளவிற்கு விசுவாசம் இருப்பதால் நாம் வரலாற்று இயேசுவை குறித்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம்

அவர்களுக்குள் இருந்ததாக தெரியவில்லை. விசுவாசம் வரலாற்றை சார்ந்த ஒன்றல்ல. தற்காப்பு என்பது விரும்பத்தகாத ஒன்றாக இருக்கிறது. இங்க, பாரம்பரிய தளர்வான காலம் இருக்கிறது – ஜெர்மானிய லிபரலிசம், “இயேசுவின் வாழ்க்கை” இதற்கு அடுத்து “கேள்வியில்லா காலம்” – இங்கதான் பார்த் மற்றும் புல்ட்மேன் வருகிறார்கள். பார்த் பிரபலமா இருந்தது 1916, 1918 ல முதல் உலக போரின் காலத்தில் அவரது பிரபலமான ரோமருக்கான நிருபம் வெளியானது. புல்ட்மேன் மிகவும் வியாபார சரக்காக இருந்தது, 1940 பிரபலமாக ஓடிக்கொண்டிருந்த காலத்திற்கு பிறகு ஒரு கட்டுரையை அவர் எழுதினார், புதிய ஏற்பாடும் புராணங்களும். 1960 வரைக்கும் இயேசுவின் வரலாற்று காரியங்களை குறித்து கற்றுகொள்வது அதிக பிரபலமான ஒன்றாக இருக்கவில்லை.

ஆனால் 1950ல, எர்னஸ்ட் கேசிமேன், குந்தர் போர்ன்கம், ஜேம்ஸ் ராபின்சன் – புல்ட்மேன் அவர்களின் மாணவர்கள் – சொன்னாங்க, “பொறு, ஒரு நிமிடம். இப்ப ரொம்ப தூரம் போயிட்டு இருக்கோம்.| 1950 களில் வெளிவந்த சில முக்கிய பத்திரிக்கைகளில், குந்தர் போர்ன்கமின் நசரேயனாகிய இயேசு போன்றவற்றில், அவர்கள், “எங்கள் குருத்துவர், ருடல்ப் புல்ட்மேன், கொஞ்சம் அதிக துளைவில் இருக்கிறார். விசுவாசம் வரலாற்றை சார்ந்தது அல்ல.” என்று விவாதித்தனர். “இதுதான் உண்மை. வரலாற்று இயேசுவை பற்றி நம்மிடம் பதிவுகள் இருக்கவேண்டும் இல்லாவிட்டால் அவரையும் சகாப்தங்களின் பட்டியலில் சேர்த்து அவரது பக்கங்களை மறைய செய்திடுவோம். வரலாற்று இயேசுவை பற்றி சொல்ல நிச்சயம் நிறைய விஷயங்கள் இருக்கிறது.” அவர்களுடைய குருத்துவரை போல, புல்ட்மேன், மாதிரி விசுவாசம் வரலாற்றை சார்ந்தது என்று எண்ணம் அவர்களுக்கு இல்லை. இது வரலாற்று இயேசுவை குறித்த இரண்டாவது கேள்வியானது” அல்லது அந்த நாட்களில் சொல்லப்பட்டது போல இருந்தது, “புதிய தேடல்” இது குறுகிய காலம் இருந்த ஒரு அமைப்பாகும்.

இப்போது நம்மத்தியில் காணப்படுகிற “வரலாற்று இயேசுவை குறித்த மூன்றாவது தேடல்,” என்பதற்கு முன்னோடிகள் 1970களிலும் எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் இருப்பதை ஒவ்வொரு இறையியல் கண்ணோட்டத்தின் படி வெளிவரும் புத்தகங்களை வைத்து பார்க்க முடியும் – ரொம்ப பழைய, நடுத்தரமான, மத்திய பகுதி, வலது – என்று இந்த புத்தகங்கள் நமக்கு இயேசுவை பற்றி தெரிந்துகொள்ளவேண்டிய காரியங்களை பற்றி கூறுகிறது. இப்ப, இப்படி அந்த மூன்று காலங்களும் துண்டுதுண்டாக இருக்கிறது. இதெல்லாம் நிகழ்காலம் வரைக்கும் நம்மை கொண்டு செல்கிறது. ஆனால் இதைதான் மூன்றாம் தேடலை பற்றி எல்லா புத்தகங்களிலும் இருக்கிற பொதுவான காரியம். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் காரியம் இயேசு ஒரு யூத மார்க்கத்தை சேர்ந்தவர் ஆனா அதற்கு புறம்பாக அவரை பற்றி அறிந்துகொள்ளவேண்டும் என்பார்கள். யூத மானுடவியல் என்பது ரொம்ப முக்கியம். யூத சமூகவியல் என்பது மிகவும் முக்கியமானது. அவங்க இயேசுவை தங்கள் காலத்தை சேர்ந்தவர் என்பதை யூத அட்டவணை பற்றி சொல்ல முன்வருகிறார்கள் – ருடல்ப் புல்ட்மேன் னின் அறிவு சார்ந்த கால அட்டவணைப்படி அல்ல.

ஆனா அந்த மூன்று தேடல்களும்: நூறு வருடங்களின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் “இயேசுவின் வாழ்க்கை” “புதிய தேடல்” அடுத்த சில பத்தாண்டுகளில் வந்தது; இப்போது அதற்கு அடுத்துஇருபது ஆண்டுகள் கடந்து “இந்த மூன்றாவது தேடல்” மிகவும் பலுவானதாக மாறியது. இது விவாதிக்கிறார்கள் – வரலாற்று இயேசு – இன்றைய இறையியலில் இதுதான் காரசாரமான விவாத தலைப்பாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்ப புதிய ஏற்பாட்டின் அற்புதங்களை குறித்து என்ன சொல்றீங்க? உண்மையகவே இய்சு அற்புதங்களை செய்தார் மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்று இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றாளர்கள் ஒப்புகொள்ள வாய்ப்புகள் இருக்கிறதா? இந்த தலைப்பை பற்றி Dr. ஹேபர்மாஸ் சிறப்பாக விளக்கமளிக்க கூடியவர் இவர் சித்தாந்த மேதையான ஆண்டனி பிளூவுடன் இந்த தலைப்பில் விவாதித்து இருக்கிறார், நிறைய சிறந்த கட்டுரைகளையும் எழுதிருக்கிறார். அவருடைய பதிகளை கேளுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** இப்ப, இது அற்புதங்களை குறித்த கேள்வியை நமக்குள் உண்டாக்குகிறது. முதல் கேள்வியை, தள்ளி வைத்திடுங்கள். இரண்டாவது கேள்வி, அதிக சுவாரஸ்யமாக இல்லை. “மூன்றாவது கேள்வி,” தற்போது இயேசு செய்திடும் அற்புதங்கள் அனைத்தும் காரசாரமான கேள்விகள் நிறைந்த ஒன்றாக இருக்கிறது.

அற்புதங்கள் அனைத்தும் மூன்று பகுதிகளாக பிரிக்கப்படுகிறது: பேயோட்டுவது, சுகமளிக்கும் அற்புதங்கள், இயற்கையான அற்புதங்கள். விமர்சகர்கள் இங்கு ஏதோவொரு காரியம் நடந்துகொண்டு இருக்கிறது என்பதை மற்றும் ஒப்புகொள்ளுகிறார்கள். அதாவது, இயேசுவை பற்றி சொல்லும்போது அவர் ஜனங்களை சுகபடுத்தினார், ஜனங்கள் அவர் தங்களை சுகப்படுத்தியத்தை நம்பினார்கள் என்றும் இருக்கிறது. அவர் உண்மையாகவே பிசாசுகளை துரத்துவதை நம்பினார் பிசாசு பிடித்திருந்தவர்களும் பிசாசு தங்களை விட்டு விலகியதாக நம்பினார்கள். அதாவது, வரலாற்று ரீதியாக பார்க்கும்போது இது உண்மையாகத்தான் இருக்கிறது.

ஆனா இப்ப இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை பற்றி என்ன சொல்லமுடியும்? இது இன்னும் பல விமர்சகர்களின் எல்லைக்கு வெளியில் இருக்கிறது. தேவன் வரலாற்றில் செயல்பட்டு இருக்கிறார் என்பதை சொல்ல வேண்டிய நேரம் இது என்று யோசிப்பது கிடையாது. ஆனால் இங்க ஒரு விஷயத்தை நீங்க நேரடியாக சொல்லியாக வேண்டும் அதாவது ஒரு யூகத்தை அவர்கள் முன்பாக நிறுத்தி இருக்கிறார்கள், “கம் ஆன்! இது நவீனகாலம். நாம் அற்புதங்களை எல்லாம் நம்ப முடியாது”. இந்த மாதிரி சொல்வது ஏற்புடையதா இருக்காது. ஒப்பிட்டு பார்க்கும் உலகில் இருக்கிறோம். இது அறிவியல் நாகரிகமான உலகம். எல்லாவற்றையும் ஆதாரங்களின் முன்னுரிமை படிதான் எற்றுகொள்ளுகிற நிலை. இந்த ஆவணங்களை பார்க்கும்போது ஏதோவொன்று அதிசயமாக நடந்திருப்பது போல தெரிகிறது, முதல்ல அதிசயமான ஒரு கேள்வி குறியை நாம முன்னால வைக்கணும் அதோடு வரலாற்று கேள்வியை கேட்கனும்: அற்புதங்கள் மூலமாய் நடப்பது என்ன? உயிர்த்தெழுதலில் மூலம் என்ன நடக்கும்? இப்பவே தேவன் தான் இயேசுவை எழுப்பினாரா என்று தீர்மானிக்க வேண்டாம், ஆனா யோசிக்க ஆரம்பிக்க இது சிறந்த வழி, “கால சமயங்களில் என்ன நடந்தது? இயேசு என்ற

பெயருடைய ஒருவர் இருந்தாரா? அவர் சிலுவையில் மரித்தாரா? அவருடைய சீஷர்கள் அவரை திரும்பவும் பார்த்தார்களா?

இப்ப எந்த கேள்வியும் கேட்க வேண்டாம், "இதெல்லாம் தேவனால் நடந்த காரியங்களா? வரலாற்றாளர்கள் என்ன சொல்வார்கள்?| அவர்களிடம் எந்த உபகரணமும் இல்லை, அவங்க உங்ககிட்ட அற்புதங்களை பற்றி பேசும்படி சொல்வார்கள். ஆனால் பாலஸ்தீனத்தில் முதல் நூற்றாண்டில் இந்த நபர் இருந்தார் பேசினார் என்பதற்கு அவர்கள் ஆதாரங்களை வைத்திருக்கிறார்கள். இரண்டாவதாக, அவர் சிலுவையில் மரித்தார் என்பதற்கு ஆதாரம் இருக்கு, ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்ட நபர். அதற்கு பிறகு அவரை பார்த்ததாக சொல்லும் மக்களின் சாட்சிகள் அவர்களிடம் உள்ளது.

ஒருபக்கம் பார்க்கும்போது அற்புதங்களுக்கு முன்னுரிமையை கொடுப்பது சரியல்ல என்று சொல்லுவேன். ஆனா இன்னொரு பக்கம் பார்க்கும்போது, என்ன சொல்றேன்னா, "முதல்ல சிறப்பான வரலாறு எது என்று பார்க்கலாம் பிறகு கேள்விகளை கேட்க துவங்கிடலாம், "இதுல ஏதாவது அற்புதமாக இருக்க முடியுமா." என்ன பொருத்தவரைக்கும் இங்கு என்ன நினைக்கிறேன்னா நமக்கு இருக்கும்ஆவணங்களுக்கு நேராக வழிநடத்துவதை தவிர வரலாற்றாலர்களுக்கு வேறு வழி இல்லை. இயேசு இப்படிப்பட்டவர் என்று வரலாறு கூறுகிறது என்றால், அதை பார்க்க நாம் திறந்த மனதோடு இருக்கவேண்டும்.

இப்ப, நா உயிர்த்தெழுதலை குறித்து சொன்ன விஷயம் இப்படிதான் இருக்கும்: நசரேயனாகிய இயேசு என்னும் நபர் உண்மையாகவே இந்த பூமியில் ஒரு மனிதனாக கிபி 25, 27 மற்றும் இருபத்தி எட்டுகளில் இருந்தாரா. சரி, வரலாற்றாளர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், "ஆமா, இருந்தார். அவர் ஜீவிக்கவில்லை என்ற கருத்தை பொதுவாக யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை." ருடல்ப் புல்ட்மேன், சொல்லும்போது, சொல்கிறார், "வரலாற்றில் சொல்லப்பட்ட இயேசு வாழ்ந்திருக்கிறார் நடந்தார் பேசினார் என்பதை யாரும் சந்தேகிக்காமல் மறுக்காமல் இருப்பதே நமக்கு கிடைத்த தயவு."

அப்ப, வரலாற்றாளர்கள் முன்வது இதைதான் சொல்கிறார்கள், "ஆமா, அதற்கான ஆவணங்கள் இருக்கிறது. அப்படின்னா அவருடைய, மரணம்?

"அது ஒரு பிரச்சனை இல்லை. எல்லாருமே மரிக்கிறார்கள்."

வேறு சில வரலாற்றாளர்கள், :இந்த பாதையை பின்பற்றிடலாம். ஆமா, அது சிலுவைக்கு நேராக நம்மை நடத்திடும். ரோமர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள், அவர் மரித்தார், இதை வரலாற்றில் எடுத்துகொள்ளலாம் என்கின்றனர்."

சரி, இப்ப உயிர்த்தெழுதலை குறித்து பார்க்கும்போது, ஜனங்கள் பொதுவா ரொம்ப பதட்டப்பட ஆரம்பிக்கிறாங்க. ஆனா நான் ஒன்னே ஒன்னு சொல்லுவேன், நாம எந்த கேள்வியும் கேட்க்க வேண்டாம், "தேவன் இடைபட்டு அவரை கல்லறையில் இருந்து வெளியேற்றினாரோ? இதுல சுலபமான கேள்விகளை கேட்டுக்கொள்ளலாம், "நசரேயனாகிய இயேசு, பாலஸ்தீனத்தில் வாழ்ந்தவர், சிலுவையில் அறையப்பட்டவராக கருதப்படுபவர், சிலுவை மரணத்திற்கு பிறகு யாராவது அவரை பார்த்தார்களா? அவரோடு நடந்து பேசி அவரை யாராவது தொட்டாங்களா?"

அதாவது, C.S. லூவிஸ் இந்த அற்புதங்களின் பகுதியை வேறுவிதமாக விளக்கி சொல்கிறார், "உலக வரலாற்றில் முதன் முறை சம்பவிக்கும் நிகழ்வு. ஆனா அதற்கு பிறகு, எல்லாம் யதார்த்தமாக மாறினது. உதாரணமாக, இய்சு ஐயாயிரம் பேருக்கு மேலானவர்களுக்கு அப்பத்தை பெருக செய்தார், அந்த அற்புதத்தை ஒருமுறை செய்தார், பெருக்கமடைந்தது – எல்லாரும் சாப்பிட்டார்கள், எல்லாரும் திருப்தியடைந்தார்கள், எல்லாருமே சோர்வடைந்தார்கள். நீங்க சாப்பிட்ட பிறகு இதுதான் நடக்கும். அதற்கு பிறகு, அதாவது, இங்க சில உயிரியல் காரியங்கள் சம்பவிக்க துவங்குகிறது. அப்படித்தான நடக்கும்; உணவு அதைதான் செய்கிறது – அற்புதம் என்பது பெருக்கம்தான், சாப்பிடுவதோ அதற்கு பிறகு நடப்பதோ அல்ல.

உயிர்த்தெழுதலை வைத்து பார்க்கும்போது, சில எளிமையான கேள்விகள் முன்வருகிறது. இயேசு என்று ஒருவர் இருந்தாரா, இயேசு சிலுவையில் மரித்தாரா, அதற்கு பிறகு ஜனங்கள் அவரை பார்த்ததாக சொன்னார்களா? அப்படின்னா, ஏன்? இந்த மாதிரியான கேள்விகளை தான் வரலாற்றாளர்கள் முன்வைக்கிறவர்களாக இருக்கிறார்கள். அதற்கான பதிவுகள் நம்மிடம் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இந்த நிகழ்சிகளில் நீங்கள் Dr. ஹேபர்மாஸ் பேசினவைகளை கேட்டிருப்பீர்கள் இவர் தொடர்ந்து விமர்சக வல்லுனர்கள் இயேசுவை குறித்து ஒப்புகொள்ளுகிற வரலாற்று ஆதாரங்களை பற்றி சொல்லிக்கொண்டு இருக்கிறார். அவை யாவை? அந்த 12 உண்மைகளை சொல்லி ஏன் வல்லுனர்கள் அதை ஏற்றுகொள்கிறார்கள் என்றும் சொல்லும்படி கேட்டிருக்கிறேன். கவனியுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** இப்ப, கேள்வி இதுதான்னு , நல்லா தெரியும், எந்த, மாதிரியான ஆவணங்கள் நம்மிடம் இருக்கிறது? நான் எந்த உண்மைகளை பற்றி உங்களுக்கு சொல்லிக்கொண்டு வருகிறேன்? ஏன்னா சிலருடைய கூச்சல் எப்படி இருக்குதுன்னா, அவங்க, உறுதியா, எந்த ஆதாரமும் இல்லை என கூறுகிறார்கள்! சரியா. நம்முடைய நேயர்கள் யார்? சுவிசேஷகர்கள் எல்லாரும் புதிய எராட்டின் பகுதிகளை பார்த்து என்ன சொல்றாங்க, "உண்மை எல்லா பக்கத்திலும் இருக்கிறது. ஒவ்வொருமுறை வாசிக்கும் போதும் ஒரு உண்மையை கண்டறிகிறேன், ஏனென்றால் வேதாகமம் தேவனால் அருளப்பட்டு எழுதப்பட்ட வார்த்தைகளாக இருக்கிறது."
மற்றவர்கள் ஒருவேளை, "இல்ல. இது வெறும் ஆதிகால இலக்கியம் என்றிடலாம்." இப்ப இன்னொரு கேள்வியை கேட்டுக்கொள்ளவேண்டும், "எது நம்பக்கூடிய ஆதாரங்கள் எது நம்பத்தகாதவைகள்." அநேக வல்லுனர்கள் கிறிஸ்தவர்கள் சுவிசேஷம் என்று சொல்லுகிற அந்த பகுதிகளை சார்ந்த ஆதாரங்களை சொல்கிறார்கள்: சொதிக்கபடுதல், மரணம், அடக்கம், இயேசுவின் உயிர்த்தெழுதல். குறைந்தது 12 ஆதாரங்கள் இருக்கிறதென்று நம்புகிறேன், குறைந்தது 12. அதாவது, பெரும்பாலான வல்லுனர்கள் இதற்கு மேல நிறைய சொல்வாங்க, விமர்சக வல்லுனர்கள் ஒப்புகொள்ளுகிற குறைந்த பட்ச ஆதாரங்கள் 12. நிச்சயமாக இவை அனைத்தையும் ஒவ்வொரு மேதைகளும் ஒப்புகொள்வார்கள்.

1. இயேசு சிலுவை மரணத்தால் மரித்தார்.

2. அவர் அடக்கம் பண்ணப்பட்டார்

இதுல வியப்பான விஷயம் எதுவுமில்லை. நிறையபேர் மரிக்கிறார்கள். அநேகர் அடக்கம்பண்ணப்படுகிரார்கள்.

3.அவருடைய மரணம் சீஷர்களுக்கு பயத்தை ஏற்படுத்தி நம்பிக்கையை இழக்க செய்தது, அவருடைய வாழ்க்கை முடிந்துவிட்டது என்று நம்ப வைத்தது. திடீரென்று உங்களுடைய நெருங்கிய நண்பர் இறந்துவிட்டால் நீங்க என்ன செய்வீங்க?

4.இதை, பெரும்பாலும் எல்லாருக்கும் தெரியுமான்னு தெரியல, அநேக வல்லுனர்கள் இயேசுவை அடக்கம் பண்ணின கல்லறையானது சில நாட்களுக்கு பிறகு காலியாக இருந்தது கண்டறியப்பட்டது என்பதை அவர்கள் நம்புகிறார்கள்.

5. சீஷர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள்.

இதை தான் விமர்சகர்களும் ஏற்றுகொள்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியுமென நினைக்கிறேன். உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்த அனுபவங்கள் தங்களுக்கு உண்டானது என்று சீஷர்கள் நம்புகிறார்கள். இயேசு அவர்களுக்கு காட்சியளித்தார் என்று நம்புகிறார்கள்.

6.இந்த அனுபவங்களின் நிமித்தமாக, அவர்கள் (சீஷர்கள்) சந்தேகிப்பதிலிருந்து விசுவாசிப்பவர்களானார்கள். அவங்க தங்களோட நிழலை பார்த்து பயந்தவர்கள், என்று சொல்லலாம், இயேசுவோடு தங்களை இணைத்து சொல்ல பயந்தவர்கள், இப்ப அவருடைய மரணம் உயிர்த்தெழுதலை பற்றி தைரியமாக பிரசங்கிக்கிறார்கள்.

7. ஆதி திருச்சபைகளில் இந்த செய்திதான் மைய பொருளாக பிரசங்கிக்கப்பட்டது.

பவுல் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கிறதா – “பிரதானமாய் சொல்கிறது” இயேசுவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்.

8. இந்த செய்தியானது பெரும்பாலும் எருசலேமின் சுற்று வட்டாரத்திற்குள் தான் பிரசங்கிக்கப்பட்டது அங்க தான் கொஞ்ச நாளுக்கு முன்னால இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்.

9. இந்த பிரசங்கத்தின் விளைவாக, சபை பிறந்து வளர ஆரம்பித்தது.

10. ஞாயிற்று கிழமை பொதுவான ஆராதனை நாளாக மாறினது. இது யூத விசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது.

11. யாக்கோபு, நாத்திகனாக இருந்தவர், உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்ததற்கு பின்பு அதை நம்பினதால் அவரும் விசுவாசிக்கும் நபராக மாறினார்.

12. சில வருடங்களுக்கு பிறகு, உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்ததாக நம்பினதால் அவரும் தனக்கு உண்டான அனுபவத்திநிமித்தம் மன மாறினார்.

நா என்ன சொல்ல வர்றேன்னா காலியான கல்லறை என்ற ஒன்றைதவிர, மற்ற வரலாற்று பட்டியல்கள் எல்லாவற்றையும் விமர்சக வல்லுனர்கள் ஒப்புகொள்கிறார்கள், அவர்களில் பெரும்பாலானோர் காலியான கல்லறையையும் ஏற்றுகொள்கிறார்கள். என்னுடைய

புத்தகங்களில் சிலவற்றை நீங்கள் பரிசோதித்து பாருங்கள், வரலாற்று இயேசு என்ற என்னுடைய புத்தகத்தையும் மற்ற புத்தகத்தையும், பார்க்கும்போது விமர்சக வல்லுனர்கள் இதை ஒப்புகொள்வதை பார்க்க முடியும்.

ஒருவேளை, நீங்க கேட்கலாம், "ஒரு, நிமிஷம் இருங்க. பன்னிரண்டா? அது ரொம்ப அதிகம், இதை இன்னும் கொஞ்சம் குறைக்க முடியுமா? நாம முன்வைக்கிற காரியங்களில் இன்னும் சில சுவாரஸ்யமான நாத்திகர்களின் கருத்தை வைக்க முடியுமா?

ஆல்ரைட். உண்மையாகவே இந்த பட்டியலை என்னால நான்கு, ஐந்து, ஆறு – என்று நிச்சயம் குறைக்க முடியும். அப்படி நான் இந்த பட்டியலை குறைத்தால், இந்த காரியங்களை தான் முன்பாக எடுத்து வைப்பேன். இயேசு சிலுவை மரணத்தினால்தான் மரித்தார். சீஷர்கள் உயிரோடு எழுந்த இயேசுவை கண்ட அனுபவங்களை பெற்றதாக நம்புகிறார்கள். அதினிமித்தம் அவர்களுடைய வாழ்கை மறுரூபமானது, அதற்கு பின்பு, தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்பவன் ஒரு தரிசனத்தை கண்டதால் தான் இயேசுவை ஏற்றுக்கொண்டதாக நம்புகிறார், அவர் தனிபட்டவிதத்தில் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்தார்.

இந்த நான்கு மறுக்க முடியாத உண்மையை யார் வேண்டுமானாலும் முன்வைக்க முடியும். இந்த நான்கு உண்மைகளை முன்வைத்து மட்டுமே இயேசுவினுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை மையப்படுத்தி சொல்ல முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, இந்த 12 உண்மைகளை ஆதாரங்களை விமர்சகர்கள் எல்லாரும் எற்றுகொள்ளுகிறார்கள். சில நாத்திகர்கள் இருபதிற்கும் மேல் இருக்கலாம் என்கின்றனர். ஆனால் Dr. ஹேபர்மாஸ் இயேசு வாழ்ந்தார் என்பதையும் சிலுவையில் மரித்தார் மற்றும் உயிரோடு எழும்பினார் என்று நம்புவதற்கு நான்கு முதல் ஆறு ஆதாரங்களே போதுமானது என்று கூறுகிறார். அவர் விளக்கி சொல்வதை கவனியுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சரி, இதை குறைக்கும்போது நான்கு ஆதாரங்களை முன்வைக்க முடியும் அதை பெரும்பாலான விமர்சகர்கள் ஏற்றுகொள்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன், நடுபகுதியில் இருப்பதும் வலது பக்கம் இருப்பதும் போதுமாக இருக்கும். இதில் ஒருசில விஷயங்களை சேர்த்துகொள்ளலாம்: கிறிஸ்தவ பிரசங்கத்தின் மைய பொருள் உயிர்த்தெழுதல் தான். யாக்கோபை போன்ற நபர்களை வைத்து சொல்ல முடியுமே, இயேசுவின் சகோதரன் அவர் – நாத்திகன் கிறிஸ்துவை ஏற்றுகொண்டாரே? கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் பற்றிய உண்மை தெளிவாக எடுத்து சொல்லப்பட்டது, சில வாரங்களுக்கு முந்தின நிகழ்ச்சியில் இதை சொல்லி இருக்கிறோம். இந்த நான்கு உண்மைகளை வைத்து என்ன செய்வது?

இதுதான், என்னோட கருத்து. சில விமர்சகர்கள் இன்னும் பெரிய பட்டியலை கொடுக்கலாம். அவர்களில் சிலர்… இறைநம்பிக்கை இல்லாதவர்கள் இருபது வரை சொல்வார்கள். நா சொல்லட்டுமா, எனக்கு 20 தேவை இல்லை. எனக்கு 12 மட்டும் போதும்." மேலும் வருவிதமாக யோசிக்கிரவர்களும் உண்டு, "இதை 12ல இருந்து குறைவாக்கிக முடியுமா? நா சொல்லட்டுமா, :எங்கிட்ட நாலு இருக்கு, ஐந்து, ஆறு, ஏழு

இருக்கு – இதிலிருந்து அதை பிரித்து சொல்லுவேன்.” அது தன்னிச்சையான எண் தான். ஏன்? யன்னா யாருமே, பொதுவா அந்த உண்மைகளை மட்டும் சொல்ல போவது கிடையாது. நா என்ன சொல்றேன்னா நா என்னோட பட்டியலில் 12 மட்டும் சொல்லுகிறேன், அதை நான்காக, ஐந்து ஆறு என்று பிரிக்கிறேன். எனக்கு இது திருப்தியாக இருக்கிறது. இந்த ஆவணங்களும் மேலும் இந்த ஆவணங்களை பதிவுகளை ஏற்றுகொள்ள சொல்லப்படும் காரியங்கள், இது எல்லாத்தையும் வைத்து பார்க்கும்போது இயேசு மரித்தார் மறுபடியும் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று சொல்ல போதிய ஆதாரம் இருக்கு. இந்த உண்மைகள் அடங்கிய இனிப்பை உங்கள் வீட்டிற்கு நீங்கள் எடுத்து செல்லுங்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இன்றைக்கு உங்களுக்கு சொல்லப்பட்ட தகவல்களின் முக்கிய குறிக்கோள் இதுதான். இயேசுவின் வாழ்கையை குறித்த நான்கு அல்லது ஆறு வரலாற்று ஆதாரங்களை எடுத்துகொண்டால், அதுவே போதுமானதாக இருக்கும் இது மற்ற இயற்கையான கோட்பாடுகள் அனைத்தையும் எதிர்த்து மரித்தோரிலிருந்து இயேசு உயிரோடு எழும்பினார் என்பதை நிருபித்திடும். இந்த உண்மைகள் இயேசு தேவன் என்று கூறுகிறது. இயேசுவை விட்டு விலகி ஓடாமல், அவரிடத்திற்கு ஓடி வந்து மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் பெற்றுகொள்ளுங்கள். Dr. ஹேபர்மாஸ் விளக்கமளிக்கிறார்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** வெறும் இந்த நான்கு, ஐந்து, ஆறு, ஏழு உண்மைகளோடு, விமர்சகர்கள் ஒப்புகொள்வதில் ஒரு சிறு பகுதிதான் இது, அநேகர் இதை ஏற்றுகொள்கிறார்கள், அதனாலதான் இதை தைரியமாக சொல்கிறேன். இந்த உண்மைகளை மட்டும் வைத்து, நான் பெரும்பாலான இயற்கை கொள்கைகளை எதிர்த்து விவாதித்து இருக்கிறேன் – சில இடங்களில் கேட்ப்பார்கள், :சரி, இயேசு உயிரோடு எழும்பாவிட்டால் என்ன ஆகியிருக்கும்? இப்படி நடந்திருந்தா என்ன நடந்திருக்கும் _________ (என்னவேனாலும் சொல்லலாம்). நா சொல்லட்டுமா இந்த அரை டசன் உண்மையோடு, நிச்சயமாக, உண்மையில், எந்த மாதிரியான அனுமானங்களையும் உங்களால் எளிதில் மேற்கொள்ள முடியும் அதோடு உயிர்த்தெழுதலை குறித்த சரியான சிறந்த ஆதாரங்களை நீங்கள் புரிந்துகொண்ட நடக்க உதவியாக இருக்கு.

அதுமட்டுமில்ல, இந்த பட்டியல் மற்ற விமர்சகர்களின் பட்டியலை விட சிறியது.... விமர்சகர்கள் பட்டியலிட்ட உண்மைகள். அதாவது, மற்றவர்கள் சொல்ல கூடியதைவிட சிறிய பட்டியலைத்தான் நான் கொடுக்க விரும்புகிறேன். இந்த உண்மைகளில், சொல்லபோனால், இரண்டு முன்நிபந்தனைகள் இருக்கிறது. இது மற்ற முன்னணி விமர்சகர்களால் ஏற்றுகொள்ளப்படுவதோடு, இரண்டாவதாக, ஒவ்வொன்றும் தனிதனி பதிவுகளாக தனித்து நிற்கிறது. அதனால இந்த காரியங்களை முன்வைத்து பேசுகிறவர்கள், “உங்களுக்கு விருப்பமான நான்கை மட்டும் சொல்லலாம் என்று சொல்வதற்கில்லை. உங்களோடு நடுநிலையான மனோபாவத்துடன் நடக்க விரும்புகிறேன். ஏதோ ஒன்றை உங்களுக்கு நான் சொல்ல மாட்டேன்,” நேர்த்தியாக சொல்லும்போது அந்த நபரையும் நம்மால் நடத்த முடியும். நீங்க பூஜ்யத்தில் இருந்து துவங்கிடலாம் ஏதாவது சில ஆதாரங்களை சொல்லுங்க ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு. இந்த ஒவ்வொருன்றிற்கும் உரிய ஆதாரத்தை சொல்லுங்கள். ஆனா முடிவு

என்னன்னா, இந்த உண்மைகள் மட்டுமே இயற்கையின் கோட்பாடுகளுக்கு எதிராக நிற்க முடியும், இரண்டாவதாக, இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு போதுமான ஆதாரங்களை தருவதாக இருக்கிறது.

இங்க இன்னொரு விஷயத்தை பதிவு செய்கிறேன். ஏதோவொரு ஆதாரம் ஏதோவொரு பெலகீனமான கோட்பாட்டை முன்வைக்க வேண்டாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் சுவாரஸ்யமான இயற்கை கொட்டபாட்டை முன்வைக்கலாம். அனுமானங்கள் சொல்கிறது இயேசு மரித்துவிட்டார், சரியா. ஆனால் அவர் மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பவில்லை. சீஷர்களுக்கு மனபிரம்மை உண்டானது. அங்க எந்த மன பிரம்மையும் இல்லை என்று நமக்கு தெரியும். அது இங்கயே நமக்கு தெளிவாகிறது. அவர்களுக்கு பிரம்மை ஏற்படவில்லை.

இந்த பட்டியலை மட்டும் பார்க்கும்போது, கவனிங்க, முதலாவதாக, சீஷர்கள் தாங்கள் பார்த்தது உயிர்த்தெழுந்த இயேசுவைத்தான் என்று உறுதியாக நம்பினார்கள். பவுல் இந்த அனுபவம் சில குழுவினருக்கு உண்டாயிற்று என்று சொல்லுகிறார். மனபிரம்மை என்பது தொற்றுதன்மை உடையது அல்ல. அது குழுவினருக்கு ஏற்படும் ஒன்றல்ல.

இரண்டாவதாக, மனபிரம்மை என்பது அரிதான ஒன்று. ஒரு குழுவான மக்கள் என்று சொல்லும்போது, அங்க கடினமான பேதுரு இருக்கிறார், மென்மையான மனம் கொண்ட மரியாள், கனிவான இதயமுள்ள யோவான் இருக்கார். என்ன சொல்றேன்னா, அங்க பலதரப்பட்ட மக்கள் இருக்காங்க, பலதரப்பட்ட நேரங்களில், வெவ்வேறு இடங்களில் இருந்தாங்க. பவுல் சொல்கிறார் தனிப்பட்ட நபர்கள், தனிப்பட்டவர்களும் இருக்காங்க, 500 பேரும் இருந்தாங்க. வெவ்வேறு இடங்களில் அவர் காட்சியளித்தார் ஒரே இடத்தில் அல்ல – இதுல ரொம்ப கவனமாக இருக்க விரும்புகிறேன் – இவங்க எல்லாரும் ஒரே மன நிலையில் இருந்தா ஒருவேளை பிரம்மை உண்டாக வாய்ப்புகள் இருக்கலாம்.

மேலும், அவர்கள் மறுரூபமடைந்தார்கள். மனபிரம்மை இப்படி மாற்றத்தை உண்டாக்காது. உண்மையில், இந்த மனபிரம்மையை குறித்து ஆராய்ச்சி செய்த ஒருவரை எனக்கு நன்றாக தெரியும் பொதுவா மக்கள் என்ன சொல்லியிருக்காங்கன்னா, "என்னோட மன நிலையை நான் மாற்றிக்கொண்டேன் என்னோட நண்பர், இப்படி நடக்க வாய்ப்பில்லை என்றார்; அவர்களை பார்க்கவில்லை என்றார்." ஒன்று தெரியுமா? எல்லாத்துக்கும் மேல் இது உயிர்த்தெழுதலுக்கு பொருத்தமா இருக்கும். மரித்தவர்கள் உயிரோடு எழுவதில்லை. அவங்க தான் பார்த்தாங்க நாம பார்க்கல. அதனால அவர்களுக்கு போதித்தவைகளை அவர்கள் விசுவாசித்ததினால் இந்த மாற்றம் உண்டானதென்று தெரிகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல பற்றி என்ன சொல்வீங்க? அவர் மனபிரம்மை பெற கூடிய மனநிலையில் அங்க இல்ல. அதாவது, அவர் தமஸ்குவுக்கு போகிற வழியில் இருந்தால், அவர் சொல்றார், விசுவாசிகளுக்க்கு எதிராக அவர்களை மிரட்டும்படி போயிட்டு இருக்கார். இப்ப, அவர் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்க்க நினைத்தாரா?

அடுத்தது யாக்கோபு இருக்கார், இயேசுவின் சகோதரன், வீட்டு ஆள்தான். ஒருவேளை உங்களுடைய மகனுக்கு... அல்லது உங்க சகோதரன் இப்படிப்பட்ட உலகை அசைக்கும்

அனுபவம் பெறும்போது என்ன செய்வீர்கள்? யாக்கோபு சொல்கிறார், “இதை நான் நம்பவில்லை.” இறை நம்பிக்கை அற்ற மனிதர். விமர்சகர்கள் இதை ஒப்புகொள்கிறார்கள். ஆனா யாக்கோபு மன பிரம்மை பார்க்க கூடிய மனநிலையில் தான் இருந்தாரா? எனக்கு அப்படி தோனல.

இங்க சில பிரச்சனைகள் இருக்கலாம், என்னது? ஒருவேளை இதுல பாதி சரியாக இருக்கலாம், இதை நாம அந்த பட்டியலில் இருந்து பெற்றுகொண்டோம், நாம ஏற்கனவே பார்த்த அந்த பட்டியலில் இருந்தவை.

இங்க நா சொல்ற விஷயத்தை புரிந்துகொள்ள ஒரு உதாரணத்தை பார்க்கலாம். நம்மை சுற்றிலும் ஒரு கூட்ட மக்கள் இருக்கிறார்கள் என்று வைத்துகொள்வோம் மேலும் இந்த பக்கம் கொஞ்சம் பழமைவாதிகள் இருக்காங்க. அவங்க எனக்கு புதிய ஏற்பாட்டின் காரியங்களை சொல்றாங்க. நிச்சயமா இயேசு உயிரோடு எழுந்ததும் இருக்கும்.

அடுத்த குழுவை பார்க்கும்போது. இதிலிருந்து பெரும்பாலானதைதான் உங்களுக்கு சொல்வார்கள். இயேசு உயிரோடு எழுந்தார்.

அடுத்தா பகுதியையும் பெறும்வரைக்கும் நீங்க தொடர்ந்து போயிட்டே இருப்பதுதான் நல்லது, கடைசியா மக்கள் என்ன சொல்வாங்கன்னா, “உங்களுக்கு 10 அல்லது 12 டும் சொல்லிடுறேன். அதனாலதான் இந்த 12 காரியங்களை நான் முன்வைக்கிறேன். அல்லது நானும் நான்கை மட்டுமே சொல்லி இருப்பேனே.

ஆனால் இதையெல்லாம் விட்டுட்டு, :பூஜ்யத்தில் இருந்து ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்கிறவர்களுக்கு, நீங்க இந்த ஒவ்வொன்றையும் சொல்லவேண்டும். ஒவ்வொன்றிற்குமான ஆவணங்களை சொல்லுங்கள். இதன் முடிவு என்னன்னா, இந்த உண்மைகள் அனைத்தும் இயற்கையான கோட்பாடுகளுக்கு எதிர்த்து நிற்பதாக இருப்பதொடும் உயிர்த்தெழுதலை குறித்த சிறந்த ஆதாரமாகவும் திகழ்கிறது.

****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.